**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
**II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**Sessions Case No. 25/2022**

Deposition of witness for : PW11

Name : மாதேஸ்வரன்

Father's / Husband Name : பழனி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 27th day of November 2024.

**27-11-2024**

**1 முதல் 5 வரையிலான எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:–**

நான் தங்காயூர், அம்மன் காட்டூரில் குடியிருந்து வருகிறேன். நான் சென்டிரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜரில் இல்லாத பூபதியை எனக்கு தெரியாது. நான் வேறு ஒரு வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது

என்னிடம் சாட்சி கையெழுத்து போட வேண்டும் என்று கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. படிவம்–91ல் காட்டப்படும் 4 கையெழுத்துக்களும் தன்னுடையது என்று கூறுகிறார். அந்த கையெழுத்துக்கள் மட்டும் **அ.த.சா.ஆ–P5 வரிசைகள்** ஆகும். 14.03.2021ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் காட்டப்படும் முதல் கையெழுத்து என்னுடைய தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ–P6** ஆகும். அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 13.03.2021ம் தேதி இரவு 7.00 மணியளவில் நான் சங்ககிரியில் இருந்த போது சங்ககிரி காவல் ஆய்வாளர் எனது தொலைபேசி மூலம் காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள் என்றும், நான் அங்கு போனேன் என்றும், அங்கு நாச்சிமுத்து (A1), பிரவீன்குமார் (A2) ஆகியோர்களை கைது செய்து வைத்திருந்தார்கள் என்றும், அவர்களில் நாச்சிமுத்து என்பவரை இரவு 7.15 மணியளவில் ஆய்வாளர் அவர்கள் விசாரிக்கும்போது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சங்ககிரி தாலுக்கா அக்காமபேட்டை சேர்ந்த ஆறுமுகம் மகன் சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பிறகு அன்றே இரவு 8.00 மணியளவில் பிரவீன்குமார் என்பவரை காவல் ஆய்வாளர் விசாரிக்க

அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், அதன் பிறகு 8.30 மணியளவில் எதிரி நாச்சிமுத்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த லாவா செல்போனை ஆய்வாளர் படிவம்–95 தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த படிவம்–95 ல் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பிறகு 8.45 மணியளவில் பிரவீன் என்பவர் ஆஜர் செய்த TN 52 L 8433 என்ற யமாஹா எப் இசர்ட் என்ற மோட்டார் சைக்கிளையும், அவர் சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சாம்சங் செல்போனையும் ஆய்வாளர் படிவம்–95 தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த படிவம்–95 ல் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், அதன் பிறகு பிரவீன்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி சதீஸ்குமார் என்பவரை தங்காயூரில் அவரது வீட்டில் இரவு 9.15 மணிக்கு ஆய்வாளர் கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்தார் என்றும், அன்று இரவு 10.10 மணியளவில் காவல் ஆய்வாளர் மேற்படி சதீஸ்குமாரை விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், அன்று இரவு 11.15 மணியளவில் எதிரி சதீஸ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர் ஆஜர்செய்த சாம்சங் செல்போனை ஆய்வாளர் படிவம்–95 தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த படிவம்–95 ல் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி

கையொப்பம் செய்தோம் என்றும், அதன் பிறகு எதிரி பிரவீன் என்பவருடன் சங்ககிரி டிவிஎஸ் மேம்பாலம் அருகில் சென்று அங்கிருந்த பிரகாஷ்ராஜ் மற்றும் சக்தி ஆகியோரை எதிரி அடையாளம் காட்ட அவர்களை கைது செய்து காவல் நிலையம் வந்தார்கள் என்றும், பிறகு 14.03.2021 தேதி அதிகாலை 00.30 மணியளவில் எதிரி சக்தி என்பவரை காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பிறகு சக்தி என்பவர் அதிகாலை 2.00 மணியளவில் அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த Hero Button செல்போனை படிவம்–95 ல் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அதில் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பிறகு அதிகாலை 2.15 மணியளவில் எதிரி பிரகாஷ்ராஜ் அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த Moto Cellphone செல்போனை படிவம்–95 ல் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அதில் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், அதன் பிறகு எதிரி சக்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி உப்புபாளையம், மாந்தோப்பு அருகில் சென்று அங்கிருந்த புதர் மறைவில் இருந்து எடுத்து ஆஜர் செய்த காத்தடிக்கும் பம்பு ஒன்றை காவல் ஆய்வாளர் அவர்கள் அதிகாலை 2.45 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அதில் நானும், சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், அது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு

சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.